(ஆடி 13) 2022 ஜுலை 29-ம் தேதி வெள்ளிகிழமை மாலை 04.00 மணிக்கு
திருவாரூர் நகர்மன்ற சாதரணக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா, நகரமன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| **பொருள் எண் 01**<br>**நகரமன்றத் தலைவர், நகரமன்றத் துணை தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>**திருவாரூர் வடபாதிமங்கலம் சோமசுந்தரம் அரசு உதவிபெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 1916-ம் ஆண்டு அன்றைய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட (Board High school) கழகப்பள்ளி என்று அழைக்கப்பட்ட அரசு பள்ளியாகும். 17.01.1962 அன்று முதல் ஜி.இராமானுஜ முதலியார் பள்ளிக்குழு பள்ளி நிர்வாகத்தை எடுத்துக்கொண்டு நடத்தி வருகிறது. மேற்கண்ட அரசு பள்ளி நம் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் படித்த பள்ளி என்பது நமக்கெல்லாம் மிகப்பெருமை. திருவாரூர் நகரில் அரசினர் ஆண்கள்மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வேண்டும் என்று திருவாரூர் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மக்கள் நீண்ட காலமாக பல்வேறு நிலைகளில் போராடி வரும் நிலையில் மேற்கண்ட 1916-ம் ஆண்டு முதல் அரசு பள்ளியாக செயல்பட்ட தற்போது வடபாதிமங்களம் சோமசுந்தம் அரசு உதவி பெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை மீண்டும் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறோம். அதேபோல் திருவாரூர் நகரில் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இல்லாததால் தமிழக அரசு அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றை உருவாக்கி தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.** | 90) தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் 02**<br>நகரமன்ற துணைத்தலைவர் திருமதி.அகிலா சந்திரசேகர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.<br>நகராட்சிக்கு உட்பட்ட மழைநீர் வடிகால் முழுவதையும் தூர்வாரும் பணிக்காக (J.C.P Mini Hitachi, Grasscuter) போன்ற இயந்திரங்கள் நகராட்சிக்கு சொந்தமாக வாங்குதல் மற்றும் நகர் முழுவதும் குப்பைத் தொட்டி வைக்கவும், 6 வது வார்டில் ராமகே ரோட்டில் பள்ளி அருகில் வேகத்தடை அமைக்கவும் வாசன் நகரில் நீர்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கவும், பொது வழியில் ஆடு, மாடுகள் போக்குவரத்துக்கு இடையூறாக அதிகமாக சுற்றித் திரிவதை நகராட்சி கையகப்படுத்தி புதிய வாடி அமைத்து பாதுகாத்து பொது சந்தையில் ஏலம் விடப்படும் என்ற தீர்மானம் நிறைவேற்றிடவும் மழைநீர் வடிகாலுக்கு இடையூறாக இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றி தருமாறும் **தீர்மானத்தை நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | 91) தீர்மானிக்கப்பட்டது, ஆடு மற்றும் மாடு சுற்றித்திரிவதை பிடித்து அடைக்க வாடி அமைக்கவும் தீர்மானிக்கப் படுகிறது. |
| **பொருள் எண் 03**<br>**4**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஜ.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.<br>4-வது வார்டுக்கு உட்பட்ட வடக்கு தெரு கடைசியில் மற்றும் நடுவில் உள்ள இரண்டு கல்வெட்டுக்களை புதுப்பித்து தரும்படியும் 4வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கடைதெருவில் மழை நீர் தேங்கி நிற்கிறது எனவே வடிகாலை சீரமைத்து தருமாறும் அனைத்து வாய்கால்களையும் மழைகாலத்திற்கு முன்பே தூர்வாரி **தீர்மானத்தை நிறைவேற்றி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.** | 92) தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 04**<br>**5**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.B.ஷகிலாபானு அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**எனது பகுதியில் செல்லக்கூடிய B-CHANNEL (B-வாய்யகாலில் இருந்து பிரிந்து செல்லும் பிரிவு வாய்க்கால் ராமகே ரோடு , எம்.எம்.ஐ நகர் , கொடிக்கால் தெரு , சூஃபி நகர் , பர்மா தெரு , ரஹமானியா தெரு, தெற்கு தெரு வழியாக சுக்கான் ஆற்றை சென்றடைகிறது. இதில் வாக்காலின் குறுக்கே செல்லக்கூடிய வழிதடத்தில் சுமார் 10 இடத்தில் சீர்பாலம் அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | 93) தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 05**<br>**6**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பா.ஐஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் | 94) தீர்மானிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| **சந்தன மஹாராஜா தோட்டம் மற்றும் ஆண்டித்தோப்பில் மழைநீர் வடிகால் அமைத்தல் , விருப்பாட்சி நடப்பு தெரு கல்வெர்ட்டு பழுதடைந்துள்ளதால் புதிய கல்வெர்டு அமைத்தல் மற்றும் 60அடி தர்கா பின்புறம் உள்ள ஆழ்குழாய் பம்பை மினி பவர் பம்பாக மாற்றி தரவும் தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | |
| **பொருள் எண் 06**<br>**7**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜி.வரதராஜன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>கம்பர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தினை சீரமைத்து தரும்படியும் , பாலாஜி நகரில் மினி பவர் பம்பு ஒன்று அமைத்தும், தென்றல் நகல் "B" வாய்க்கால் பாலத்தினை இரண்டு வாகனம் செல்லும் அளவுக்கு அகலப்படுத்தி கொடுக்குமாறும், 20-க்கு மேற்பட்ட இடங்களில் புதிய மின் விளக்கு அமைத்து தருமாறும், தோப்பு தெருவில் உள்ள சுகாதார வளாகம் மற்றும் சமுதாய கூடத்தினை சீரமைத்தும் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.<br>ஸ்ரீ தேவி நகர் , பாலாஜி நகர் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றார் போல் சீரமைத்தும், பாலாஜி நகர், தோப்பு தெருவில் உள்ள சாலைகளை சீரமைத்தும், தென்றல் நகர் , V.S.R நகர் பகுதியில் மழை நீர் வடிகாலை சுத்தம் செய்தும் , நல்லப்பா நகர் , துர்காலயா ரோடு சாலையை சீர் செய்தும் , மாரியம்மன் கோவில் பகுதியில் இருந்து கம்பர் தெரு செல்லும் ஒற்றையடி பாலத்தை புதியதாக கட்டி தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 95)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 07**<br>**10** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.இரா.தெட்சிணாமூர்த்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**எனது வார்டில் உள்ள மேட்டுத்தெருவில் பொதுமக்கள் வசதிக்காக குடிநீர் மினி பவர் பம்பு அமைத்து தருமாறும் , கல்தேர் அருகில் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்திட** தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 96)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 08**<br>**19** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ஜெ.விஜயலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**குளுந்தான் குளம் நிரம்பினால் நீர் வடிய வடிகால் வசதி அமைத்து தரவும், சிவம்நகர், குளுந்தான் குளம் கீழ்கரை, தென்கரை, காட்டுக்கார தெரு ஆகிய சாலைகளில் 6 தெருவிளக்குகள் புதிதாக அமைத்து தரவும், காட்டுக்கார தெரு ஆற்றங்கரை சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அதில் புதிய சிமெண்ட சாலை அமைத்து தரவும், காட்டுக்கார தெருவில் சிவன் கோவில் முதல் ஆற்றங்கரை வரை குடிநீர் குழாய் அமைத்து** தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 97)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 09**<br>**18** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஆர்.ஆசைமணி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**18 வது வார்டில் சூரியன் குளம் தென்கரை, ஆறுமுக நாடார் தோட்டம், பேட்டை ஆகிய மூன்று தெருவிலும் சாலை பழுது அடைந்துள்ளது. அதனை சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தும், பழைய G.H மழைநீர் வடிகால் வாய்க்கால், G.H மடப்புரம் ஆறுமுக நாடார் தோட்டம், சூரியன் குளம் தென்கரை உள்ளிட்ட தெருகளில் சாலையை சீரமைத்து தரவும், காரைக்காட்டு தெரு மினி பவர் பம்புகளை பழுது பார்த்து தரவும், திருமஞ்சன வீதியில் உள்ள மினி போர் டேங்கு உடைந்துள்ளது அதனை உடனடியாக சரிசெய்து** தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 98)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 10**<br>**21** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.இரா.சங்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>21-வது வார்டு பகுதில் உள்ள இராணுவ நகர் நகராட்சி பூங்காவை சுத்தம் செய்தும் 8 தெரு விளக்குகள் அமைத்தும், சூமேக்கர் காலனி கழிப்பறை மினி போர் பம்பு அமைத்தும், செட்டியார் காலனி 2 வது சந்து மண் சாலையை தார் சாலையாக மாற்றியமைத்தும், மழைநீர் வடிகால் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 99)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 11**<br>**25** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெ.அய்யனார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>திருவாரூர் பழைய பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மொழிக்காகவும், தமிழ் சமுதாயத்திற்காகவும் பாடுபட்ட திரு.வி.க அவர்களின் சிலை அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தை புதுப்பித்து வர்ணம் பூசி தருமாறும்,<br>தஞ்சை சாலை குரு நகரில் நகர் வாசிகள் பயன்பாட்டிற்காக மினி பவர் பம்பு அமைத்து தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 100)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 12**<br>**26** வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>பெரிய மில் தெருவில் உள்ள பாலம் தணிவாகவும் பழுதடைந்தும் உள்ளதால் மழைக்காலங்களில் வாய்க்கால்களில் வரும் மழைநீர் மற்றும் கழிவுநீர் பாலத்தின் கீழ்வழியாக செல்ல முடியாமல் பாலத்தின் மேல் பகுதி மற்றும் ரோடு வழியாகவும் | 101)<br>தீர்மானிக்கப்பட்டது. |

<table>
<tr><td>செல்கிறது. மேலும் பாலத்தின் அடியில் முன்பிருந்த பாலத்தின் இடிபாடுகளும், குடிநீர் பைப்கள், BSNL ஆப்டிக்கல் ஒயர்கள் செல்வதாலும் பாலத்தின் கீழ்பகுதியில் நீர் செல்ல முடியாமல் பாலத்தின் மேல் பகுதி வழியாக ரோட்டில் சென்று வாய்க்காலில் கலக்கிறது. இதை தவிர்க்க புதிய பாலம் உயரமாக மற்றும் அகலமாக அமைத்தும் பழைய இடிப்பாடுகளை அகற்றியும் , குடிநீர் வழங்குவதில் அதிக சிரமத்தினை தவிர்க்கும் பொருட்டு பெரியமில் தெருவில் அதிக கொள்ளளவுக் கொண்ட புதிய குடிநீர் தொட்டி அமைத்து தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண் 13<br>27 <u>வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.தினேஷ்குமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>27 வது வார்டு பகுதியில் ஆத்தாகுளம் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. மழைக்காலங்களில் வீடுகளை சுற்றி மழைநீர் சூழ்ந்து அப்பகுதி மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். எனவே அப்பகுதிக்கு உரிய வடிகால் வசதி செய்து தருமாறும், ஐ.பி கோவில் மேலத் தெரு(டால்பின் பள்ளி அருகில்), ஐ.பி கோவில் நடுத் தெரு(தெரு முற்றம் அருகில்), ஐ.பி கோவில் தெற்கு தெரு (பைபாஸ் இணைப்பு அருகில்), ஐ.பி கோவில் வடக்கு தெரு (தண்ணீர் தொட்டி அருகில்) ஆகிய இடங்களில் வேகத்தடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>கே.டி.ஆர் எஸ்டேட் முதல் ஆத்தாகுளம் வரை மழைநீர் தேங்காமல் இருக்க மழைநீர் வடிகால் அமைத்து வாளவாய்க்கால் ஆற்றில் இணைத்திடவும் ஆத்தாகுளம் மற்றும் செல்லாத்தா குளத்தினை தூர்வாரிடவும் மற்றும் கே.டி.ஆர் எஸ்டேட் பகுதியில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா அமைத்தும், ஐபி கோவில் தெற்கு தெரு உபசந்துகளில் (இரண்டு இடங்களில் ) ஹாலோ பிளாக் சாலை அமைத்து தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.</td><td>102)<br>தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 14<br><u>28 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.தி.கோமதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>28-வது வார்டு பகுதி பாரதி தெருவில் உள்ள குடிநீர் மினி பவர் பம்ப் மோட்டார் ஒயர் மற்றும் ஸ்விட்ச் போர்டு, அதில் உள்ள சுவிட்சிகளும் சேதம் அடைந்துள்ளது. அதனை புதிதாக மாற்றி தருமாறும், 28 வது வார்டில் உள்ள குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை புதுப்பித்து தருமாறும் , காந்தி சாலை ரவுண்டானாவில் உள்ள குளத்தின் கீழ்கரையில் உள்ள காலியிடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதை அகற்றி மேற்படி இடத்தில் வணிக வளாகம் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன்.</td><td>103)<br>தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 15<br>29 <u>வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அன்வர்உசேன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>பைபாஸ் ரோட்டிலிருந்து அலிவலம் செல்லும் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது எனவே அப்பகுதியில் தார்சாலை அமைத்து தருமாறும் , செல்வம் தெரு, சிவன் கோவில் தெரு, மஞ்சக்கொல்லை தோப்பு, மஜித்தோப்பு , பெரியார் தெரு , மேட்டுப்பாளையம் , சின்ன மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் குழாய் தரைதளம் மிகவும் மோசமாக உள்ளதை சரி செய்திடவும் , மஜித்தோப்பில் மினி பவர் பம்பு அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன்.</td><td>104)<br>தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 16<br>இந்நகராட்சி ஆணையர் , பொறியாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் மே 2022 மற்றும் ஜுன் 2022 ஆகிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>105) பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 17<br>திருவாரூர் நகராட்சி பகுதியில் துப்புரவு பணியாளர்களால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை நெய்விளக்கு தோப்பு நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் வடம் போக்கி தெரு நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் மூலம் குப்பைகளை எடுத்து வரப்பட்டு அரைத்து உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட குப்பைகளை எடை போடுவதற்கும் சலிப்பதற்கும் இயந்திரம் விநியோகம் செய்திட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.அதன் விபரம் பின்வருமாறு<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>விலைப்புள்ளி கோரப்பட்ட நிறுவனங்களின் விபரம்</th><th>500 கிலோ கொள்ளவுள்ள எடை போடும் இயந்திரம் (1 வீதம்)</th><th>100 கிலோ கொள்ளவுள்ள எடை போடும் இயந்திரம் (1 வீதம்)</th><th>3 மில்லி மீட்டர் துணை அளவு கொண்ட உரம் சலிக்கும் இயந்திரம் (1 வீதம்)</th></tr>
<tr><td>1</td><td>கமலா டிரேடர்ஸ் திருச்சி</td><td>14750/-</td><td>6962/-</td><td>64900/-</td></tr>
<tr><td>2</td><td>பரிசித் டிரேடர்ஸ் திருச்சி</td><td>13571/-</td><td>6823/-</td><td>60918/-</td></tr>
<tr><td>3</td><td>ஆதி எண்டர்பிரைசஸ்</td><td>15340/-</td><td>7198/-</td><td>66080/-</td></tr>
</table></td><td>106) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | திருச்சி | | | |
|---|---|---|---|---|

**மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பரிசித் டிரேடர்ஸ் திருச்சி** என்பவரின் விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண் - 2ல் உள்ள **என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளதனை மன்றம் ஏற்கலாம்.**

ந.க.எண் 1077 /2022/எச்1

**பொருள் எண்** 18

107) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சி பகுதியில் எதிர் வரும் பருவமழை காலங்களில் கொசுவினால் ஏற்படும் நோய் தொற்று தடுப்பு மற்றும் கொரானா நோய் தொற்று வரமால் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் கீழ் கண்ட பட்டியலில் உள்ளவாறு விநியோகம் செய்திட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதைத்தொடர்ந்து கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விலைப் புள்ளி கோரப்பட்ட நிறுவனங்களின் விபரம் | 16 லிட்டர் கொள்ளவு கொண்ட கைத் தெளிப்பான்கள் (Manual sprayer) | 16 லிட்டர் கொள்ளவு கொண்ட பேட்டரி | 12 லிட்டர் கொள்ளவு கொண்ட பவர் தெளிப்பான்கள் | சாக்கடைகளில் உருவாகும் கொசு புழுக்களை அழிக்கும் BT | அபேட் (1லி வீதம்) | பைரித்திரம் (1லி வீதம்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கமலா டிரேடர்ஸ் திருச்சி | 2352/- | **5376/-** | **25088/-** | **1652/-** | **767/-** | **1198/-** |
| 2 | **பரிசித் டிரேடர்ஸ் திருச்சி** | **2016/-** | **4610/-** | **23050/-** | **1298/-** | **737.50/-** | **1172/-** |
| 3 | **ஆதி எண்டர்பிரைசஸ் திருச்சி** | **2464/-** | **5488/-** | **25760/-** | **1770/-** | **779/-** | **1221/-** |

**மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பரிசித் டிரேடர்ஸ் திருச்சி** என்பவரின் விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண் - 2ல் உள்ள **என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளதனை மன்றம் ஏற்கலாம்.**

ந.க.எண் 1078 /2022/எச்1

**பொருள் எண் 19**

108) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

திருவாரூர் நகராட்சி புதிய பேரூந்து நிலைய நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.48ஐ திரு.ஆர். ரமேஷ் என்பவர் ஏலம் எடுத்து நடத்திவந்த நிலையில் அவர் காலமான காரணத்தால், அதனை நடத்த இயலாமல் அவரது மனைவி திருமதி.ஆர். ஆனந்தி அவர்கள் 2021-2022ம் ஆண்டு வரை கடை வாடகை முழுவதையும் செலுத்தி 28.04.2022 அன்று கடையை ஒப்படைப்பு செய்யது விண்ணப்பம் கொடுத்துள்ளமையால், மேற்கண்டகடையினை ஒப்படைப்பினை ஏற்று பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி கடைக்கு வருவாய் இழப்பு ஏற்படாவண்ணம் பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.973/2022/அ5

**பொருள் எண் 20**

109) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேரூந்து நிலைய நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.51ஐ திரு.ஜி.விஜயன் என்பவர் ஏலம் எடுத்து நடத்திவந்த நிலையில் கொரோனா காலகட்டத்தினால் கடைமுன்பு பேரூந்து நிறுத்தம் இல்லாத காரணத்தினாலும் போதிய வருமான இல்லாத காரணத்தினால் மூன்றாண்டுகள் முடிந்த நிலையில் கடை வாடகையினை 2021-2022ம் ஆண்டு வரை தனது வைப்பு தொகையில் பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள வைப்புத்தொகையை வழங்கிடவும் கடையினை ஒப்படைப்பு செய்யதும் விண்ணப்பம் கொடுத்துள்ளமையால், மேற்கண்டகடையின்

ஒப்படைப்பினை ஏற்று பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி கடைக்கு வருவாய் இழப்பு ஏற்படாவண்ணம் பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1074/2022/அ5

**பொருள் எண் 21**

110) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018-19-ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV 24 எண்ணிக்கையில் புதிதாக வழங்கப்பட்டது. மேற்படி வாகனங்களின் மூலம் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது 3 வாகனங்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | **பழுதுதான வாகனத்தின் விவரம்** | **வாகனங்களின் எண்ணிக்கை** | **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES (RS)** | **SRI POWER ELCTONICS (RS)** | **ESSAR AGENCIES (RS)** |
|---|---|---|---|---|---|
| 1 | பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV (Battary Operated Vechiles) | 3 | **498441**/- | **520950/-** | **515970/-** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES KUMBAKONAM** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள (**RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES KUMBAKONAM**) என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். / 2022/எச்1

**பொருள் எண் 22**

111) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் **TN50-0259 டிப்பர் வண்டிக்**கு பேட்டரி பழுதடைந்து உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வாகனத்திற்கு பேட்டரி ஒன்று சப்ளை செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் விற்பனையாளர்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| **வ. எண்** | **வாகன எண்** | **விபரம்** | **DAY NIGHT MARKETING SALES &SERVICES** | **JAI INVETER SALES &SERVICES** | **கணேஷ் என்டர்பிரைசஸ்** |
|---|---|---|---|---|---|
| **1** | **TN50-E-0259** | **பேட்டரி சப்ளை செய்தல்** | **10500** | **11800** | **11500** |

**மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகொடுத்துள்ள DAY NIGHT MARKETING** SALES &SERVICES **என்ற நிறுவனத்திடமிருந்து பேட்டரி வாங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று DAY NIGHT MARKETING **SALES &SERVICES** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ. **10500 /-** வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1353/ 2022/எச் 1

**பொருள் எண் 23**

112) அலுவலக

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50 L 2532 .காம்பக்டர் வண்டிக்கு பழுதுகள் சரி செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

| **வ. எண்** | **வாகன எண்** | **விபரம்** | **அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்** | **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர்** | **கஜராஜ் கம்பெனி** |
|---|---|---|---|---|---|
| **1** | **TN50L 2532** | **பழுதுகள் சரி செய்தல்** | **225852/-** | **186971/-** | **202450/-** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர் என்ற நிறுவனத்திடமிருந்து பழுதுகள் சரி செய்யவும் மற்றும் தகுதிசான்று பெறவும் பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ.**186971/-** வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1414 / 2022/எச்1

**பொருள் எண் 24**

113) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50M 0270 .டிப்பர் வண்டிக்கு பழுதுகள் சரி செய்யவும் மற்றும் தகுதிசான்று பெறவும் அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | **வாகன எண்** | **விபரம்** | **அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்** | **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர்** | **கஜராஜ் கம்பெனி** |
|---|---|---|---|---|---|
| **1** | **TN50M 0270** | **பழுதுகள் சரி செய்தல்** | **133031/-** | **124999/-** | **129000/-** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர் என்ற நிறுவனத்திடமிருந்து பழுதுகள் சரி செய்யவும் மற்றும் தகுதிசான்று பெறவும் பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ**. 124999/-** வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1173 / 2022/எச்1

**பொருள் எண் 25**

114) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

இந்நகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்ப்படுத்தப்பட்டு வந்த (Computer Bin) தகர குப்பைகள் மற்றும் (E-Waste) தகரங்கள் ஆகியவை தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அதனை ஏலம் விடுவதாக முடிவு செய்து நகர் மன்ற தீர்மான எண் 74 நாள் 6.05.2022ந் தேதிய அனுமதிப்படி ஏலம் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | பெயர் விபரம் | 1 கிலோ ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | எம்.ராமு பழைய இரும்பு வியாபாரம்<br>2, நெய்விளக்கு தோப்பு,திருவாரூர் | ரூ 27/ |
| 2 | என்.ராஜரெத்தினம் , ஜோதி விலாஸ் | ரூ 30/ |

| | | | |
|---|---|---|---|
| | 42, தர்ம கோயில் தெருதிருவாரூர் | | |
| 3 | ஆர்.கணேஷ் பழைய இரும்பு வியாபாரம் 2, நெய்விளக்கு தோப்பு,திருவாரூர் | ரூ 28/ | |

அலுவலக குறிப்பு:

1) வரிசை எண் 2ல் கண்ட திரு என்.ராஜரெத்தினம் என்பவரது 1 கிலோ ரூ30/ க்கு கோரிய உயர்ந்தபட்ச ஏலத் தொகையை அங்கீரிக்கலாம்
2) நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுஉத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் 944 / 2022/ எச்1

**பொருள் எண் 26**

115) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50M 0259 .டிப்பர் வண்டிக்கு பழுதுகள் சரி செய்யவும் மற்றும் தகுதிசான்று பெறவும் அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வாகன எண் | விபரம் | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் | குரு ஆட்டோ கேரேஜ் | கஜராஜ் கம்பெனி |
|---|---|---|---|---|---|
| **1** | **TN50M 0259** | **பழுதுகள் சரி செய்தல்** | **120596/-** | **130744/-** | **127794/-** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பழுதுகள் சரி செய்யவும் மற்றும் தகுதிசான்று பெறவும் பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ**. 120596**/-- வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1288 / 2022/எச்1

**பொருள் எண் 27**

116) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நாமக்கல் நகரில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் மாண்புமிகு திரு.K.N.நேரு அவர்களின் முன்னிலையில் எதிர்வரும் 03.07.2022 அன்று நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாடு நடைபெறுவதை தொடர்ந்து திருவாரூர் நகரமன்றம் சார்பாக நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ.75,000/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 0015/2022/எப்1

**பொருள் எண் 28**

117) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

இந்நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் பெற்ற ஒப்பந்தகாரர் திரு.எஸ்.முரளிதரன் என்பவரால் 2020-ஆம் ஆண்டு முதல் 2021-ம் ஆண்டு வரை கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் அமலில் இருந்ததால் இருசக்கர வாகன பாதுகாப்பகம் இயங்கவில்லை எனவும் குத்தகை தொகையை தள்ளுபடி செய்திடவும் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் WP NO 11991/2022 என வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பில் எதிர்வழக்காடவும் வழக்கு செலவினம் ரூ.25000/-த்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. வழக்கு செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. வழக்கினை அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.ஜே.முகம்மது சாதிக் அவர்கள் மூலம் நடத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1626/2022/அ5

**பொருள் எண் 29**

118) அலுவலக குறிப்பு

திருவாரூர் நகரம் வார்டு.2, பிளாக்.13, நகரளவு எண்.18 (பழைய புல எண்.723/3,4)-ல்

| | |
|---|---|
| 3642.00 சதுர மீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு. ஏ. சீனிநைய்னார் அவர்கள் விண்ணப்பித்ததன் பேரில் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(கூ.பொ), திருவாரூர் அவர்களால் மனுதாரரின் மனைப்பிரிவு அனுமதி கோரும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு ந.க.எண்.196/2022/TVR, நாள்.13.04.2022-ல் சாலை அமைப்பு வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் மனைப்பிரிவில் சாலை அமைப்பு வரைபடத்தின்படி சொந்த செலவில் தார்சாலை அமைத்துள்ளார். மேலும், மனுதாரர் தனது 18.05.2022 தேதிய கடிதத்தில் பொது உபயோக பகுதி ஒதுக்கீடுகளை நகராட்சி வசம் தானமாக ஒப்படைக்க அனுமதி வேண்டி மனு அளித்துள்ளார். நகராட்சி பொறியாளரின் 23.05.2022-ந் தேதிய மதிப்பீட்டின் படி குடிநீர் வசதி மற்றும் சிறுபாலங்கள்அமைக்க ரூ.1,40,000/-(பற்றுச்சீட்டு எண்.104/01/1/22-23/0003846, நாள்.06.06.2022) நகராட்சி கருவூலத்தில் செலுத்தி உள்ளார். மேலும், தெரு மின்விளக்கு அமைக்க மின்வாரிய மதிப்பீட்டின் படி நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.78,570/- (பற்றுச்சீட்டு எண்.5610521053, நாள்.24.06.2022) செலுத்தி உள்ளார். எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் அங்கிகரித்துள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சி வசம் தானபத்திரம் வாயிலாக ஏற்கவும் நகர் ஊரமைப்பு துறையால் இறுதி ஒப்புதல் வழங்கிய பின்பு மனைப்பிரிவை அங்கீகரித்து உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.874/2022/எப்1 | அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண் 30**<br>மனுதாரர்கள் திரு. நாகரெத்தினம், திருமதி. விறிபாஇராஜகுமாரி, திரு. இளங்கோவன், திரு. ரவிக்குமார், திருமதி. ராஜலெட்சுமி, திரு. விஸ்வநாதன், திரு. குமரவேலு, திருமதி. மாலா, திரு. காளியப்பன், திரு.ரத்திஸ்குமார் ஆகியோர் தங்களுக்கு சொந்தமான வார்டு.4, பிளாக்.10, நகரளவு எண்.567/1, 2, 3, 4, 5, 6, 7, 8 & 603/4A2, 4A3, 4A5-ல் அமைந்துள்ள 13392.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை திருவாரூர் நகராட்சி அங்கிகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய பயன்பாட்டு பகுதியில் அமைவதை முதன்மை குடியிருப்பு பகுதியாக நில பயன்மாற்றம் செய்ய தரக்கோரி விண்ணப்பித்திருந்தனர். இடம் பார்வையிடப்பட்டது. மனுதாரர்கள் நில பயன்மாற்றம் கோரியுள்ள இடம் திருவாரூர் நகராட்சி அங்கிகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் வார்டு.4, பிளாக்.10, நகரளவு எண்.567/1, 2, 3, 4, 5, 6, 7, 8 & 603/4A2, 4A3, 4A5-ல் உள்ள இடம் விவசாய பயன்பாட்டு பகுதியில் அமைகிறது. எனவே, மேற்படி புல எண்களை குடியிருப்பு உபயோக பகுதியாக நில பயன்மாற்றம் செய்வது தொடர்பாக பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணை இருப்பின் தெரிவிக்குமாறு கேட்டு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் நகராட்சி சார்பாக கடந்த 23.05.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. நில பயன்மாற்றம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணையோ ஆலோசனையோ எதுவும் பெறப்படவில்லை. எனவே, மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள நில பயன்மாற்றம் தொடர்பான முன்மொழிவுகளை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை ஆகியோர் வழியாக அரசு செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1175/2022/எப்1 | 119) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.. |
| **பொருள் எண் 31**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட ஏதுவாக அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் திட்ட மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு விரிவான திட்டப்பிரேரணை தயார் செய்தல் மற்றும் உரிய அனுமதிகள் பெற்றுத்தரும் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் ஆலோசகர் நியமித்து பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் பணியினை மேற்கொள்ள 28.04.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் திட்ட மதிப்பீட்டில் ஆலோசணை கட்டணம் 0.5% சதவிதிகம் அளித்துள்ள மெர்சஸ். எஸ்.எஸ்.ஜி இன்ஜினியரிங், சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியானது ஏற்கப்பட்டு உடன் பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட திட்டப்பணிக்குண்டான விரிவான திட்டப்பிரேரணைதயார் செய்தல் மற்றும் உரிய அனுமதிகள் பெறுவதற்கு தனியார் ஆலோசகருக்கு பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து | 120) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.. |

| | |
|---|---|
| வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1038/2022/இ1 | |
| **பொருள் எண் 32**<br>திருவாரூர் நகராட்சிக்கு தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் 2021-22ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் விநியோகம் செய்யும் பணிக்கு 19.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் மூலம் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பெற்று பரிசீலித்து பார்த்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப அடிப்படையில் தகுதியானதாக இருந்ததால் 23.05.2022 அன்று மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகித உரை பிரிக்கப்பெற்று மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | 121) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.. |

| வ. எண் | நிறுவனங்களின் விவரம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து வழங்கப்பட்டுள்ள விலை விகிதம் | மதிப்பீட்டு விலை விகிதம். |
|---|---|---|---|---|
| 1. | மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி. | ரூ.2702750/- | ரூ.2837887.50/- | 5.00% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | மெர்சஸ்.தாக்ஷி இம்பேக்ட்ஸ், திருச்சி. | | ரூ.2973025/- | 10.00% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வழங்கியுள்ள மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கூடுதலாக 5.00% அதிகமாக உள்ளதனை இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.7853/2014/எப்1 நாள்.23.05.2022ந் தேதிய கடிதத்தில் விலைகுறைப்பு சம்மத கடிதம் கோரப்பட்டதில் மேற்படி மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி நிறுவனம் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்துதரப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | விலைகுறைப்பு சம்மத கடிதத்திற்கு முன் வழங்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதம் | விலைகுறைப்பு சம்மத கடிதத்திற்கு பின் வழங்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி. | ரூ.2702750/- | ரூ.2837887.50/- மதிப்பீட்டைவிட 5.00% அதிகம். | ரூ.2702251/- மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |

மேற்படி மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி நிறுவனத்தின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.
3. மேற்படி திட்டப்பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு மெர்சஸ்.தாக்ஷி இன்ப்ரா, திருச்சி நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7853/2014/எப்1

| | |
|---|---|
| **பொருள் எண் 33**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் தேக்கங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீரினை விநியோகிக்க நீர்த்த குளோரின் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.38 நாள்.11.04.2022ல் அனுமதி அளிக்கப்பபட்டதனை தொடர்ந்து 27.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு. | 122) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.. |

| வ. எண் | நிறவனங்களின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மெர்சஸ்.எம்.ஆர். டைஸ் அன்டு கெமிக்கல்ஸ், ஈரோடு. | 949620/- | 942837/- | 0.71% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | மெர்சஸ்.ரக்ஷிதா கெமிக்கல்ஸ் அன்டு டிரேடர்ஸ், ஈரோடு. | | 983515/- | 3.57% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.71% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ்.எம்.ஆர்.டைஸ் அன்டு கெமிக்கல்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.846/2022/இ1

**பொருள் எண் 34**

123) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான கேக்கரையில் அமைந்துள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குளோரினேட்டர் இயந்திரத்திற்கு நீர்த்த குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.36 நாள்.11.04.2022ல் அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 26.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறவனங்களின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப் பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மெர்சஸ்.சத்யா டியூஸ் அன்டு கெமிக்கல்ஸ், நெ.1/123, ஆசாரிபட்டி மெயின் ரோடு, ஸ்ரீனிவாசா நகர், ஆண்டிபட்டி போஸ்ட், தேனி மாவட்டம் | 360000/- | 358400/- | 0.17 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | மெர்சஸ்.ப்பிபுள் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ், நெ.12-1-76இ, முதல் தெரு, பாலகொம்பை மெயின் ரோடு, ஸ்ரீனிவாசா நகர், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம். | | 366000/- | 1.67 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.17 % சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்து மெர்சஸ். ஸ்ரீ சத்யா டியூஸ் அன்டு கெமிக்கல்ஸ், தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.1211/2022/இ1

**பொருள் எண் 35**

124) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் தெப்பத் திருவிழா 20.05.2022 முதல் 22.05.2022 வரை நடைபெறுவதனை முன்னிட்டு திருக்குளத்தின் நான்கு கரையிலும் நகராட்சியின் சார்பாக மின் விளக்கு அமைத்துத்தர செயல்அலுவலர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் திருவாரூர் அவர்களின் கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருக்குளத்தின் நான்கு கரையிலும் மின் விளக்குகள் அமைப்பது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 17.05.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு மூன்று நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு இணக்க பட்டியலின்படி இணக்கம் செய்யப்பட்டதில் மெர்சஸ்.பாலு சவுண்டு சர்வீஸ், மடப்புரம், திருவாரூர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியான ரூ.98400/- ஏற்கப்பட்டு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை உடன் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்ட பணி அத்தியாவசிய பணியாக இருந்தமையால் பணியினை உடன் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதனையும் மற்றும் பணியினை உடன் மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ்.பாலு சவுண்டு சர்வீஸ், மடப்புரம், திருவாரூர் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.421/2022/இ1

**பொருள் எண் 36**

125) அலுவலக குறிப்பு

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் தெப்பத் திருவிழா 20.05.2022

முதல் 22.05.2022 வரை நடைபெறுவதனை முன்னிட்டு வருகைபுரியும் பக்தகோடிகள் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு திருக்குளத்தின் இரு பகுதியில் தற்காலிக கழிவறைகள் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 17.05.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு மூன்று நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு இணக்க பட்டியலின்படி இணக்கம் செய்யப்பட்டதில் திரு.கே.கண்ணன், நாகா கிரேன் சர்வீஸ், திருச்சி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியான ரூ.78000/- ஏற்கப்பட்டு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை உடன் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. என்ற விவரம் மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்ட பணி அத்தியாவசிய பணியாக இருந்தமையால் பணியினை உடன் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதனையும் மற்றும் பணியினை உடன் மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.கே.கண்ணன், நாகா கிரேன் சர்வீஸ், திருச்சி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.421/2022/இ1

அனுமதிக்கப்பட்டது..

**பொருள் எண் 37**

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நமக்கு நாமே திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எண்.12 (10 இடங்கள்) மற்றும் வார்டு எண்.24ல் (7 இடங்கள்) சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.27519-42/2021/ப்பி2 நாள்.02.06.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 15.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறவனங்களின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர் | 529287/- | 528440/- | 0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.எஸ்.செந்தில் குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | | 530450/- | 0.22% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். ந.க.எண்.2749/2021/இ1

126) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

**பொருள் எண் 38**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பனகல் சாலை பகுதியில் நவீன பொதுகழிவறை அமைக்கும் பணிக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2772/2021/இ1 நாள்.02.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 27.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.வெங்கடேசன், ஒப்பந்ததாரர், அம்மையப்பன். | 3186359/- | 3186041/- | 0.01% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | வி.உமாமகேஷ்வரி, ஒப்பந்ததாரர், திருவாரூர். | | 3218223/- | 1.00% சதவிகிதம் மதிப்பீட்டை |

127) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.வெங்கடேசன் ,ஒப்பந்ததாரர், அம்மையப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.2772/2021/இ1

**பொருள் எண் 39**

128) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தூய்மை இந்தியா திட்டம் 2.0 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கட்டபொம்மன் தெருவில் சமுதாய கழிவறை அமைக்கும் பணிக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2772/2021/இ1 நாள்.02.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 27.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.வெங்கடேசன் , ஒப்பந்ததாரர், அம்மையப்பன். | 2177115.37/- | 2176897.66/- | 0.01% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | வி.உமாமகேஷ்வரி, ஒப்பந்ததாரர், திருவாரூர். | | 2198886.52/- | 1.00 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.வெங்கடேசன் ,ஒப்பந்ததாரர், அம்மையப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.2772/2021/இ1

**பொருள் எண் 40**

129) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..

தூய்மை இந்தியா திட்டம் 2.0 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட சாப்பாவூரில் சமுதாய கழிவறை அமைக்கும் பணிக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2772/2021/இ1 நாள்.02.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 27.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.வெங்கடேசன், ஒப்பந்ததாரர், அம்மையப்பன். | 2177115.37/- | 2176897.66/- | 0.01% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | வி.உமாமகேஷ்வரி, ஒப்பந்ததாரர், திருவாரூர். | | 2198886.52/- | 1.00 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.வெங்கடேசன் ,ஒப்பந்ததாரர், அம்மையப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.2772/2021/இ1

**பொருள் எண் 41**

130) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மூலதன மானிய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கேக்கரை பகுதியில் அமைந்துள்ள 6.92 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு அமைக்கும் பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.43 நாள்.11.04.2022ல் அனுமதி அளிக்கப்பட்டதனை தொடர்ந்து தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 18.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனங்களின் விவரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | RL Technologies Private Limited, No.2, Factory Road, Athur, Chengalpattu – 603 101 | 3980000/- | 3752208/- | 5.72 % சதவிகிதம் மதிப்பீட்டை விட மிக குறைவு |
| 2. | Swaraj Equipments Private Limited, No.53, Annajo Rao Nagar, Vembuliamman Koil street, west K.K.Nagar, Chennai – 600 078. | | 3803000/- | 4.45 % சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 5.72% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள RL Technologies Private Limited, No.2, Factory Road, Athur, Chengalpattu நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.2772/2021/இ1

**பொருள் எண் 42**

131) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 ஏ.டி.பி நகர் பூங்கா மேம்படுத்தும் பணிக்கு அரசாணை நிலை எண் 73 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.05.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 08.06.2022-ல் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர், திருவாரூர் | 3642686.53/- | 3636250.56/- | 0.18% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | எஸ்.தணிக்காசலம் ஒப்பந்ததாரர், திருவாரூர். | | 3819229.27/- | 4.85 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். ந.க.எண்.2595/2021/இ1

**பொருள் எண் 43**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 வாசன் நகர் பூங்கா மேம்படுத்தும் பணிக்கு அரசாணை நிலை எண் 73 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.05.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 08.06.2022-ல் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர், திருவாரூர் | 6253512.95/- | 6248525.32/- | 0.08% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.08% சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.2595/2021/இ1

132) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 44**

திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மற்றும் இதர வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு 26.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கொடிக்கால்பாளையம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி. | 25.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.21% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.60% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | கொடிக்கால்பாளையம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் வகுப்பறை கட்டிடங்கள் பராமரித்தல் பணி. | 15.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.23% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.70% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | கௌரிசாமி நினைவு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் வகுப்பறை கட்டிடம் பராமரித்தல். | 20.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.25% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.67% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | விஜயபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் வகுப்பறை, சத்துணவு கூடம் கழிப்பறை பராமரித்தல் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள வகுப்பறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல். | 25.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.27% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | இராமகே நகராட்சி தொடக்கப்பள்ளியில் வகுப்பறை கட்டிடம் பராமரிப்பு மற்றும் பழுதடைந்த நிலையில் | 20.00 | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, | 0.50% மதிப்பீட்டை |

133) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணி | | திருவாரூர். | விட அதிகம் |
| 6 | கே.டி.ஆர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் புதிதாக கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 25.00 | ப.சரவணன், 30, சிவப்பிரகாச மடத்தெரு, திருவாரூர். | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | மடப்புரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பழுதடைந்த வகுப்பறை கட்டிடம் இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணி. | 15.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.தணிகாசலம், 16, பஜனமடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | 0.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | பாவாகோபால்சாமி நகராட்சி தொடக்கப்பள்ளி பராமரிப்பு பணி. | 10.00 | கே.செந்தில்குமார், 99ஏ, துர்காலயா ரோடு, திருவாரூர். | 0.18% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.928/2022/இ1

**பொருள் எண் 45**

134) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சியின் மூலம் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் 2015-16ன் கீழ் திட்டமதிப்பீடு ரூ.75.00 இலட்சத்திற்கு திருவாரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி வளாகத்தில் நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்களுடன் தங்கும் கட்டிடம் கட்டும் பணிக்கு 28.07.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணியினை உடன் மேற்கொள்ள வேலை உத்தரவும் வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி திட்டப்பணிக்கான ஒப்பந்தப்பணியானது துவங்கப்பட்ட நிலையில் இருந்தபடியால் பணியினை உடன் மேற்கொள்ள பலமுறை அறிவுறுத்தப்பட்டதில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்பணியானது இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.79 நாள்.31.07.2019ன் மூலம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் மேற்காணும் திட்டப்பணிக்கு 22.09.2020ல் ஏற்கனவே தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட திட்டமதிப்பீட்டின் விலைவிகிதத்திலேயே செய்யப்பட்ட பணி போக மீதமுள்ள பணிகளுக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உடன் பணியினை மேற்கொள்ளப்பட்டதில் தற்போது உள்ள விலை ஏற்றத்தினால் கட்டுமானப்பணிகள் மட்டுமே முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கூடுதலாக அடிப்படை வசதி பணி, குடிநீர் வசதி, மின்விளக்கு, மின்விசிறி, தரைத்தள வசதி மற்றும் தங்குபவர்களுக்கான படுக்கைவசதி ஆகியவைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்ட திட்டப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகையில் முடிக்கப்பட்ட பணிகள் போக மீதமுள்ள அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7853 /2014/இ1

**பொருள் எண் 46**

135) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

எதிர்வரும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல் 19.02.2022 அன்று நடைபெறுவதனை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட ஸ்ரீஜி.ஆர்.எம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர் இடத்தில் வாக்குச்சாவடி வாக்கு எண்ணும் மையம் அமைக்கப்பட்டுள்ளதற்கு ஒலி ஒளி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வெளியூர் நிறுவனத்தாரர்களின் விலைப்புள்ளிகளை பெற்று ஒப்புநோக்கு இணைக்கப்பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ்.டி.எஸ்.எம் சவுண்ட் சர்வீஸ், திருவாரூர் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியானது உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குண்டான மதிப்பீட்டுத்தொகை

ரூ.226975/-னை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரருக்கு வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு "தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்" பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மற்றும் அதற்குண்டான செலவினப் பட்டியலினை பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். /2022/இ1

---

**பொருள் எண் 47**

எதிர்வரும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல் 19.02.2022 அன்று நடைபெறுவதனை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட ஸ்ரீ ஜி.ஆர்.எம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர் இடத்தில் வாக்குச்சாவடி வாக்கு எண்ணும் மையம் அமைக்கப்பட்டுள்ளதில் வாக்குகள் எண்ணுவதற்கு ஏதுவாக பேர்ரி கார்டு, வெல்டு மெஷ் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வெளியூர் நிறுவனத்தாரர்களின் விலைப்புள்ளிகளை பெற்று ஒப்புநோக்கு இணக்கப்பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ்.டி.எஸ்.எம் சவுண்ட் சர்வீஸ், திருவாரூர் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியானது உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குண்டான மதிப்பீட்டுத்தொகை ரூ.622500/-னை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரருக்கு வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு "தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்" பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மற்றும் அதற்குண்டான செலவினப் பட்டியலினை பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். /2022/இ1

136) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 48**

கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23ல் (KNMT) திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க சட்டமன்ற அறிவிப்பு 2022-23ல் இடம் தேர்வு செய்து விரிவான திட்ட கருத்துருக்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பழைய தஞ்சை சாலை சுடுகாட்டுப்பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருக்கள் மதிப்பீட்டு தொகை ரூ.150.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.972/2022/இ1

137) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 49**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 – 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்கு பொது கழிவறை 1 எண்ணிக்கை மற்றும் சமுதாய கழிவறை 2 எண்ணிக்கைகள் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022ல் அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் பொது கழிவறை மற்றும் சமுதாய கழிவறை அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | **<u>பொது கழிவறை</u>**<br>1. பனகல் சாலை | 36.28 |
| 2. | **<u>சமுதாய கழிவறை</u>**<br>2. கட்டபொம்மன் தெரு | 24.96 |

மேற்கண்ட திட்டப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

138) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 2. மேற்கண்ட திட்டப்பணிக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2772/2021/இ1 | |
| **பொருள் எண் 50**<br>நகராட்சி மற்றும் மாநகராட்சியில் உள்ள சாலைகளில் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் பாதாளச்சாக்கடை திட்டப்பணிகள் போன்றவற்றால் சேதமடைந்தது. அவற்றை சீரமைக்க மேற்கொள்ளும்போது பின்பற்வேண்டிய நெறிமுறைகள் அரசிடமிருந்து வெளியிடப்பட்டது. மேலும் சாலைகள் தரமாக அமைக்கப்படுகின்றனவா என்பதை பணி நடைபெறும்போது தள ஆய்வு செய்யும் பொருட்டு உபகரணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.<br>அதனைத்தொடர்ந்து திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் திட்டப் பணிகளில் தார்/சிமெண்ட் சாலை அமைப்பதற்கு உண்டான உபபொருட்களை ஆய்வுசெய்யப்பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சரிவர இல்லாத காரணத்தினால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு புதியதாக உபகரணங்கள் வாங்கிட அறிவுறுத்தப்பட்டது. மேற்காணும் திட்டப்பணிகளை ஆய்வு செய்வதற்கு தேவையான உபகரணங்களை விநியோகம் செய்யும் பணிக்கு 24.05.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி இனக்கம் செய்யப்பட்டதில் தமிழ்நாடு இன்ஜினியரிங் இன்ஸ்ரூமன்ட், சென்னை அவர்களால் குறைந்த விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. திட்டப்பணிகளின் அவசியம் கருதி ஆய்வுக்கான உபகரணங்கள் வாங்குவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தி நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.995/2022/இ1 | 139) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் 51**<br>எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களை எதிர்நோக்கும் வகையிலும் பொதுமக்களின் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால், கால்வாய்கள், பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி தூய்மைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், பருவமழையினால் ஏற்படும் சேத விளைவுக்கேற்ப தேவைப்படும் உபகரணங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களை கொண்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்கும் வகையில் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு பணிகளை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்றும் சேத விளைவுக்கேற்ப பணிகளை உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று உடனுக்குடன் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1335/2022/இ3 | 140) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் 52**<br>எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களை எதிர்நோக்கும் வகையிலும் பொதுமக்களின் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால், கால்வாய்கள், பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி தூய்மைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், பருவமழையினால் ஏற்படும் சேத விளைவுக்கேற்ப தேவைப்படும் உபகரணங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களை கொண்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** | 141) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

4. மன்றம் அனுமதி வழங்கலாம்.
5. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்கும் வகையில் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு பணிகளை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்றும் சேத விளைவுக்கேற்ப பணிகளை உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று உடனுக்குடன் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
6. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1335/2022/இ3

**பொருள் எண் 53**

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாக மாவட்ட விளையாட்டு அரங்கில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரதின விழா அனைத்துத்துறை அலுவலர்களுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனைப்போன்றே இவ்வாண்டும் வருகின்ற 76வது சுதந்திரதின விழா 2022 ஆகஸ்ட் 15ம் நாளன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் ஒருங்கிணைத்து சிறப்பாக நடைபெறுவதனை முன்னிட்டு விழாவிற்கு வருகைப்புரியும் அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பார்வையிட வரும் பொது மக்கள் வசதிக்காக திருவாரூர் நகராட்சியின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் விழா நடைபெறும் மைதானத்தைச்சுத்தப்படுத்துதல் தேவையான பொது மக்கள் தகவல் தொடர்பு மையம் எற்படுத்துதல், நகராட்சி டேங்கர் லாரி மூலம் குடிநீர் வசதி, தற்காலிக கழிவறைகள் அமைத்தல், நகராட்சி அலுவலக வளாகத்தினை மின்விளக்குகளால் அலங்கரித்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.300000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்காணும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிப்பு தயார் செய்யப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1734/2022/இ1

142) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 54**

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரை உள்ள தெருக்களில் விடுபட்ட தெருவிளக்குகள் அமைப்பதற்கு நகர்மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி வார்டுகளில் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி தெருவிளக்குகள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | தேவைப்படும் விவரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | மின்கம்பங்கள் | 92 |
| 2. | மின்கம்பி வடம் | 88 |
| 3. | எல்ஈடி மின்விளக்குகள் | 450 |

மேற்காணும் விவரப்படி தெருவிளக்குகள் விடுபட்ட தெருக்களில் தேவைக்கேற்ப மின்விளக்குகள் மற்றும் உபகரணங்கள் பொருத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கேட்பிற்கு உரிய தொகையினை நகராட்சி நிதி நிலைக்கேற்ப வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. புதிதாக தெருவிளக்குகள் அமைப்பதற்கு அரசிடமிருந்து திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் செலவிடப்படும் தொகையினை திட்டப்பணி செலவினத்தில் ஈடுசெய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1313/2020/இ2

143) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 55**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் இதர மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டாரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr.No.539/2005/F3 நாள்.28.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறையின் 2022-23 விலை விகிதத்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு 28.02.2022 அனுமதித்துள்ள நாள் முடிவடையும் நிலையில் 01.08.2022 முதல் 31.12.2022 வரை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.778.00 வீதம் நான்கு நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.467000/- மட்டும் (பிடித்தங்கள் உட்பட) 5 மாதத்திற்கு பணியின்

144) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| அவசரம் அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேலும் இதற்கான செலவீனம் இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி/பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1778/2022/இ1 | |
| **பொருள் எண் 56**<br><br>திருவாரூர் சோழ சாம்ராஜ்யத்தின் ஐந்து பாரம்பரிய தலைநகரங்களில் ஒன்றாக இருந்துள்ளது. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என அனைவராலும் அறியப்படுகிறது. இப்பெயர் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தினைக் குறிப்பதாகும். காவிரி ஆற்றின் டெல்டா பகுதியில் அமைந்திருக்கும் இம்மாவட்டம், நெல் வயல் வெளிகளினாலும், உயர்ந்த தென்னைமரங்களினாலும், பசுமையான தாவரங்களினாலும் செழிப்புடன் திகழ்கிறது. தலைக்காவிரி என அழைக்கப்படும் காவிரி நதி மற்றும் அதன் கிளை நதிகள் நிலத்தினை வளப்படுத்துகின்றன.<br><br>7, 8 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சைவசமயக்குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஆகியோர் இயற்றிய தேவாரத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பாடல் பெற்ற தலமாக திருவாரூர் அமைந்துள்ளது. மார்கழி ஆதிரை விழா, பங்குனி உத்திரப்பெருநாள், வீதிவிடங்கனுக்கு நீதி செய்த முறை ஆகியவற்றை இப்பாடல்களின் மூலம் அறியலாம். இக்கோயில் 9ஆம் நூற்றாண்டில் முதலாம் ஆதித்ய சோழனால் கற்கோயிலாக கட்டப்பெற்றதாகும். அதன்பின்னர், முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் புனரமைக்கப்பட்டது. பிற்காலச் சோழர்கள் மற்றும் பாண்டியர்களின் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.<br><br>முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் திருவாரூர் தலைநகரமாகவும், சைவ வளர்ச்சி மையமாகவும் திகழ்ந்ததாக இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். 13ஆம் நூற்றாண்டில், இரண்டாம் இராஜேந்திரசோழர் காலத்தில், சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் பாண்டியர்கள் மற்றும் ஹோய்சாலர்கள் ஆதிக்கத்தில் இம்மாவட்டம் இருந்துள்ளது. நாயக்கர்கள், விஜயநகர அரசுகள், மராத்தியர்கள் காலத்திலும் தொடர்ந்த அரசின் ஆதரவு காரணமாக இம்மாவட்டம் கலாச்சார மையமாக திகழ்ந்துள்ளது. மராத்தியரின் ஆட்சிக்காலத்தில் சிதம்பரம் நடராஜரின் தற்காலிக வீடாகவே திருவாரூர் இருந்துள்ளது. 1759இல் லேலியின் கீழ் செயல்பட்ட பிரெஞ்சு படைகள் திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயிலில் மறைக்கப்பட்ட பொக்கிஷங்களை தேடி சூறையாடினர். அப்போது கோயிலைச் சேர்ந்த 5 அந்தணர்கள், ஆங்கிலேயர்களுக்கு உளவு பார்க்கிறார்கள் என சந்தேகிகப்பட்டு கொல்லப்பட்டனர்.<br><br>சுதந்திரத்திற்குப் பிறகு திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக 1991 வரையிலும், பின்னர் 1997க்குப் பின்னர் நாகப்பட்டினம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. வரலாற்று ரீதியாக திருவாரூர் சமயம், கலை மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்தவர்களின் மையமாகத் திகழ்ந்தது. திருவிழிமிழலை, திருப்பாம்புரம், திருமீயச்சூர், திருவாஞ்சியம், தில்லைவிளாகம், திருக்கண்ணமங்கை போன்ற வரலாற்றில் பிரபலமான கோவில்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. முத்துப்பேட்டை அருகே ஜாம்புவானோடையில் பழமையும், புகழும் மிக்க தர்கா அமைந்துள்ளது. கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் திருவாரூரில் பிறந்தவர்கள். இவர்கள் இம்மாவட்டத்திற்கு புகழையும், கண்ணியத்தையும் சேர்க்கிறார்கள்.<br><br>திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் முதன்மைத் தொழிலாக உள்ளது. 70 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். இம்மாவட்டத்தின் முதன்மைச் சாகுபடிப் பயிர் நெற்பயிராகும். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியத்தை நிரப்புவதில் இம்மாவட்டம் முக்கியப்பங்கு வகிக்கிறது. தலைக்காவிரி மற்றும் அதன் கிளைநதிகள் பாசனத்திற்கு அளிக்கும் வண்டல் மண் வளத்தால் வேளாண்மையில் முக்கிய இடத்தை பெறுகிறது.<br><br>இம்மாவட்டத்தின் இயற்கை அழகிற்கு முத்துப்பேட்டையில் அமைந்துள்ள மாங்குரோவ் காடுகள் காரணமாகின்றன. 1937 பிப்ரவரி மாதத்தில் முத்துப்பேட்டை மாங்குரோவ் காடுகள் பாதுகாக்கப்பட்ட காடுகளாக சென்னை மாகாண அரசினால் அறிவிக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு வனத்துறை இதனைப் பாதுகாத்து பராமரித்து வருகிறது.<br>வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண்.681, நாள் 25.7.1996இன்படி 01.01.1997 முதல் தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, பிரிப்பதற்கு முந்தைய நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து 9 ஒன்றியங்களும், தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து 1 ஒன்றியம் சேர்த்து திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. திருவாரூர் மாவட்டம் 2 வருவாய்க் | 145) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

கோட்டங்களையும் 8 வருவாய் வட்டங்களையும், 10 ஒன்றியங்களையும் 573 வருவாய்க்கிராமங்களையும் கொண்டதாக பிரிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நான்கு நகராட்சிகள் உள்ளடக்கியதாகும். (திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி மற்றும் கூத்தாநல்லூர்)

திருவாரூர் நகராட்சியானது 1914ல் துவக்கப்பட்டு 01.04.1978ல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி மாவட்டத்தின் தலைநகரமாகும். 2011ம் ஆண்டு தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 58301 ஆகும். இந்கராட்சியின் மொத்த பரப்பளவு 10.47 சதுர கிலோ மீட்டர் மற்றும் 30 வார்டுகளை உள்ளடக்கியது. இந்நகருக்குள் அன்றாடம் சுற்றுலாப்பயணிகள், பொது வணிகம் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வருகைப்புரியும் மக்களின் எண்ணிக்கை சுமார் 20000 ஆகும். இந்நகராட்சி துவங்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் முடிவுற்றப்படியால் நகரினை நூற்றாண்டு சிறப்பினை சிறப்பிக்கும் வகையில் கீழ்கண்ட பணிகள் தேர்வு

செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

**நூற்றாண்டு விழா பணிகளின் விவரம்**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதிய அலுவலக கட்டிடம் | 500.00 |
| 2 | புதிய காய்கறி மார்க்கெட் | 700.00 |
| 3 | புதிய மீன் மற்றும் இறைச்சி அங்காடி | 300.00 |
| 4 | புதிய கழிப்பிடம் கட்டும் பணி. | 150.00 |
| 5 | புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி. | 500.00 |
| 6 | சாலை பராமரிப்பு பணி. | 2000.00 |
| 7 | வணிக வளாகம் அமைக்கும் பணி. | 600.00 |
| 8 | நூற்றாண்டு விழா நினைவு வளைவு அமைக்கும் பணி. | 150.00 |
| 9 | வடிகால்கள் அமைக்கும் பணி. | 1000.00 |
| 10 | சிறுபாலங்கள் அமைக்கும் பணி. | 500.00 |
| 11 | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பராமரிப்பு பணி. | 200.00 |
| 12 | பாதாளச்சாக்கடை திட்ட நீர்உந்து நிலையங்கள் | 200.00 |
| 13 | பாதாளச்சாக்கடை திட்டம் STP புதுப்பிக்கும் பணி | 250.00 |
| 14 | தூய்மை பணியாளர்கள் குடியிருப்பு வளாகம். | 600.00 |
| 15 | பேருந்து நிலையம் பராமரிப்பு பணி. | 500.00 |
| 16 | எரிவாயு மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி. | 100.00 |
| 17 | நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் கட்டிடங்களில் சூரிய ஒளியின் மூலம் மிளிரும் மின்விளக்குகள் அமைப்புகள் அமைக்கும் பணி. | 750.00 |
| 18. | நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் தெருவிளக்குகளுக்கு சூரிய ஒளியின் மூலம் மிளிரும் மின்விளக்குகள் அமைப்புகள் அமைக்கும் பணி. | 1000.00 |
| | **மொத்தம்** | **10000.00** |

மேற்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட கருத்துருக்களை நூற்றாண்டு சிறப்பு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அரசுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண். 1780 /2022/இ1

**பொருள் எண் 57**

திருவாரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் இரவு காவலராக பணிபுரிந்து வரும் திரு.எம்.விஜயசந்திரன் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக கூத்தாநல்லூர் நகராட்சியில் காலியாக உள்ள செயின் மேன் அல்லது தூய்மை பணியாளர் பணிக்கு பணி மாறுதல் கோரி அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், மேலும் மேற்கண்ட விண்ணப்பத்தினை மேல் நடவடிக்கைக்காக கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : பணியாளரின் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 115 /2022/சி1

145(A) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 58**

இந்நகராட்சியில் மாசற்ற முறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு.சி.சிவக்குமார் என்பவர் 24.02.2001 முதல் 24.02.2021 வரை 20 ஆண்டுகள் தொடர்ந்து

146) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பணிபுரிந்து வருகிறார். மற்றும் திரு.வி.விஜயகுமார் ஒட்டுநர் 24.02.2001 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்துள்ளார். அன்னார்களுக்கு அரசாணை நிலை எண் 238 நாள் 01.10.1997ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படியும் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்தவர்களுக்கு தங்கபதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே ஒட்டுநர்கள் திரு.சி.சிவக்குமார் மற்றும் திரு.வி.விஜயகுமார் இருவருக்கும் தங்கப்பதக்கம் ½ பவுன் வழங்குவதற்கும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 115 /2022/சி1

**பொருள் எண் 59**

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018-19-ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV 24 எண்ணிக்கையில் புதிதாக வழங்கப்பட்டது. மேற்படி வாகனங்களின் மூலம் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது 3 வாகனங்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | **பழுதுதான வாகனத்தின் விவரம்** | **வாகனங்களின் எண்ணிக்கை** | **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES (RS)** | **SRI POWER ELCTONICS (RS)** | **ESSAR AGENCIES (RS)** |
|---|---|---|---|---|---|
| 1 | பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV (Battary Operated Vechiles) | 3 | **499731**/- | **522750/-** | **512850/-** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES KUMBAKONAM** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-படி ஆணையர் மற்றும் நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று **RISHI MOTORS RISHI GROUP COMPANIES** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் / 2022/v¢1

147) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 60**

திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகன பாதுகாப்பத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள் குத்தகை அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கு 28.06.2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒரு நபர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளார். அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.அம்பிகாபதி, குமரன் தெரு,நாகை பைபாஸ் ரோடு,திருவாரூர். | ரூ.2400500/- |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட உரிமத்தின் மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.2254615/- ஆகும். மேற்கண்ட உரிமத்தின் 2021-22-ம் ஆண்டிற்கான தொகை 2365469/- ஆகும். தற்போது திரு.அம்பிகாபதி என்பவரால் மூன்று ஆண்டு சராசரி தொகையை விடவும் மற்றும் 2021-22-ம் ஆண்டிற்கான உரிமை தொகையை விடவும் கூடுதலாக ரூ.2400500/- உரிமம் கோரியுள்ளதால் உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
2. மேற்கண்ட உரிமத்திற்கு துறை மூலம் வசூல் செய்யப்பட வேண்டிவருமானால் ஒவ்வொரு 8 மணி நேரத்திற்கும் 2 நபர்கள் வீதம் நாள் ஒன்றிற்கு 6 நபர்கள் பணிபுரிய வேண்டி வரும் என்பதாலும் அவர்களுக்கு சுமார் மாதம் ஒன்றிற்கு ரூ. 120000/- ஊதியம் வழங்க வேண்டி வரும் என்பதாலும் கேட்கப்பட்டுள்ள ஏலக் கேள்வி தொகை ரூ.2400500/- ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

148) அலுவலக குறிப்பு ஏற்று ஏலம்அனுமதிக்கப் படுகிறது

ந.க.எண் 2506/2017/அ5

**பொருள் எண் 61**

திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 28.06.2022 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஏலம் கோரப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.ராஜாத்தி,<br>55டி, பஜனமடசந்து, திருவாரூர். | ரூ.205000/- |
| 2 | திரு.எம்.அறிவானந்தம்,<br>55 சி/1 பஜனமடசந்து, திருவாரூர். | ரூ.206000/- |

அலுவலக குறிப்பு:

1. 2019-20 முதல் 2021-22 வரை உள்ள காலத்திற்கு மேற்படி இனம் ரூ.330000/-த்திற்கு ஏலம் அனுமதிக்கப்பட்டது. அப்போது மேற்படி பேருந்து நிலையத்தில் இலவச கழிப்பறை இல்லாததால் ஏலம் அனுமதிக்கப்பட்ட கட்டண கழிப்பிடத்தில் ஒரு பகுதியை இலவச கழிப்பிடமாக பின்னர் மாற்றம் செய்யப்பட்டதால் தற்போது கோரியுள்ள ரூ.206000/- என்ற உயர்ந்த ஏலத் தொகையினை அனுமதிப்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
2. மேற்படி இனத்திற்கு 30.03.2022 , 29.04.2022 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தொடர்ந்து ஏலம் கோர முன்வரவில்லை என்பதாலும் வரிசை எண் 2-ல் கண்டுள்ள திரு.எம். அறிவானந்தம் என்பவர் ரூ.206000/- உயர்ந்த ஏலம் கோரியுள்ளதால் மேற்படி ஏலத்தினை மன்றம் ஏற்பது குறித்து முடிவு செய்யலாம். ந.க.எண் 2506/2017/அ5

149) அலுவலக குறிப்பு ஏற்று ஏலம்அனுமதிக்கப் பட்டது

**பொருள் எண் 62**

**இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு, பராமரிப்பு பணிக்காக நோய்கள் பரவும் வாய்ப்பு ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள களப்பணிக்காக நகரில் உள்ள மொத்த வீடுகளுக்கும் , 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்ற அடிப்படையில் (DBC) களப்பணியாளர்கள் 51 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்திக்கொள்ள (6 மாதங்கள் மட்டும்) 13.07.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி 3 ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. மேலும் செலவினத்திற்கு மன்றம் தமது தீர்மான எண் 30 நாள் 11.04.2022-ன் மூலம் ரூ.50.00 இலட்த்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் , முடிவுக்கும் வைக்கப்படுகிறது**

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒரு நபருக்கு ஒரு நாள் ஒன்றுக்கு ஊதியம் (ரூ.)** |
|---|---|---|
| **1** | **Shree Rama Social Devlopment Foundation, Nagapattinam** | **480/-** |

அலுவலக குறிப்பு

வரிசை எண் 2-ல் கண்டுள்ள **Sri Ramachandra Service Trust , Mannargudi என்ற நிறுவனம் அளித்துள்ள குறைந்த தொகை ரூ.440/- க்கான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்**

150) அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது

**பொருள் எண் 63**

**3**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ம.கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்

3 வது வார்டு பகுதியில் மேற்கு மற்றும் தெற்கு கொத்த தெரு இணையும் இடத்திலும், தெற்கு கொத்தத்தெரு மற்றும் வடக்கு கொத்தத் தெரு இணையும் இடத்திலும் பாலம் அமைத்து தருமாறும், கீழக்கொத்த தெரு, வடக்கு கொத்த தெரு, தைக்கால் நடுத்தெரு ஆகிய இடங்களில் சாலைகள் அமைத்தும் தருமாறும் **தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.**

151) தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் 64**

**13**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.சி.உமாமகேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்

தெற்கு மடவிளாகம் தார்சாலையை சீரமைக்கவும், மானந்தியார் தெருவில் உள்ள நகராட்சி கழிப்பிடத்தை நிரந்தரமாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மானந்தியார் தெரு பூங்காவை சீரமைத்து தருமாறும், துர்க்கை சன்னதி தெருவில் பாதாள சாக்கடை இணைப்பை ஏற்படுத்தி தருமாறும் , VST தெருவில் GRT வீடு அருகில் மூன்று சாலை சந்திப்பில் வேகத்தடை அமைக்கவும், 13 வது வார்டு பகுதிகளில் அனைத்திலும் மழைநீர் வடிகாலில்
உள்ள அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்து தருமாறும் **தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.**

152) தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் 65**

153)

| | |
|---|---|
| **17**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.சி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>17 வது வார்டில் உள்ள சித்தி விநாயகர் கோவில் தெரு செட்டிகுளம் சுற்றுச்சுவர் அமைத்து தூர்வாரி தருமாறும், கண்ணார தெருவில் பாதாள சாக்கடை 2 தொட்டிகள் Manhole Level உயர்த்தி மழைநீர் உட்புகா வண்ணம் சரி செயதும், 1 தெருவிளக்கு அமைத்தும், முகப்பில் உள்ள பாதாள சாக்கடை இணைப்பிற்காக உடைக்கப்பட்ட கல்வெர்ட்டுகளை சரி செய்து தருமாறும், எல்லைக்கால் தெருவில் 2 தெருவிளக்குகள் அமைத்து தருமாறும், முடுக்குதெருவில் ஆபத்தான நிலையில் உள்ள சாலையை சீரமைத்தும், சூரியன் குளம் முகப்பில் அமைந்துள்ள மடப்புரத்தின் மழைநீர் வடிகாலை பொக்லேன் இயந்திரம் கொண்டு தூர்வாரியும், மடப்புரம் ஓடம்போக்கி ஆற்றங்கரையில் அமைந்துள்ள உத்திரகிரி மண்டபத்தில் கிரில் கேட் அமைத்து தருமாறும் **தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் 66**<br>**22**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ரெ.ரேவதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>வார்டு 22-ல் உள்ள தர்மகோவில் தெரு பகுதியில் சிமெண்ட சாலை அமைத்தும், வசம்போடைத்தெருவில் 4 மின்கம்பம் மற்றும் 6 மின் விளக்குகள் அமைத்தும் தர்ம கோவில் தெரு, வாசன் நகர் செல்லும் பழியில் மின் விளக்கு மற்றும் 700 மீ தார்சாலை அமைக்கவும், மருதப்பட்டிணம் ரோடு பாரி நகரில் தார்சாலை மற்றும் 4 மின்கம்பம் மற்றும் மின்விளக்குகள் அமைத்து தருமாறும், தியாகி சாரங்கபாணி தெருவில் 3 மின்கம்பம் மற்றும் 4 மின்விளக்குகள் அமைத்து தருமாறும், தியாகி சின்னசாமி தெருவில் 140 அடி தார்சாலையும் பாலம் மோசமான நிலையில் இருப்பதால் அதனை சீரமைத்து தருமாறும் 3 மின்கம்பங்கள் மற்றும் 6 மின் விளக்குகள் அமைத்தும், தோட்டத்தெருவில் 2 மின்கம்பங்கள் 4 மின்விளக்குகள் அமைத்து தருமாறும் , எடத்தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறும் **தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | 154)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் 67**<br>**30**-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சோ.புருஷோத்தமன்அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>வார்டு 30-ல் உள்ள பெரியார் தெருவில் இயங்கி வரும் அங்கன்வாடி , நூலகம் மற்றும் நகரமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகிய கட்டிடங்கள் ஆபத்தான நிலையில் உள்ளதால் புதிய கட்டிடம் கட்டி தருமாறு **தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன்.** | 155)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் 68**<br>**திருவாரூர் நகராட்சி – பொதுசுகாதாரப்பிரிவுன் மூலம் தொடர்ந்து சென்ற ஜனவரி-2022 முதல் ஜுலை-2022 வரை மாபெரும் தடுப்பூசி முகாம்கள் தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி நடைபெற்றுவருகிறது. இதில் பணிபுரியும் செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உணவு வழங்குதல் மற்றும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் பற்றிய விளம்பரம் மற்றும் பேனர்கள் வைக்க வேண்டி இருப்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவு** ந.க.எண் 5437/2020/J2 நாள் 11.09.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ள திரு.ஸ்டாலின் என்ற ஒப்பந்ததாரர் ஒப்புக்கொண்டமையால் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.175000 மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஒப்புகொண்ட ஒப்பந்ததாரர் திரு.ஸ்டாலின் அவர்கள் மூலம் பணிமேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகையினை மேற்கண்ட நபருக்கு வழங்கவும் இச்செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் பேரிடர் மேலாண்மை நிதி அரசிடம் இருந்து வரும் பட்சத்தில் கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:0034/2022/எச்1 | 156) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

நாள் : 29.07.2022
இடம் : திருவாரூர்

**(ஒம்) செ. புவனப்பிரியா**
நகரமன்ற தலைவர்,
திருவாரூர்